
# சீஷத்துவம்




எல்லா ஜாதிகளையும் சீஷராக்க நாம் இயேசுவின் சீஷர்கள் என்று அழைக்கப்படுகிறோம். தேவனுடைய ராஜ்யம் வளர்வதைக் காண, நாம் சீஷராக இருக்க வேண்டும். குறிப்பாக இயேசுவைப் பின்பற்றுபவர்களுடன், மற்றவர்களை இயேசுவைப் போல

அதிகமாக வழிநடத்த நாம் தயாராக இருக்க வேண்டும்.

**இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி நாம் கற்பிக்க வேண்டும்.**

மத்தேயு 28:18-20:

> அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள்

> கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்."

இயேசுவின் ஒவ்வொரு சீஷரும் சீஷரை உருவாக்க வேண்டும். சீஷராக்குவது என்பது இயேசுவை விசுவாசிக்கிவர்களை ஞானஸ்நானம் பெறவைப்பதும் ஆகும். சீஷராக்குவது, இயேசு கட்டளையிட்ட அனைத்திற்கும் கீழ்ப்படியும்படி இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு கற்பிப்பதும் அடங்கும்.

## இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு என்ன கட்டளைகளை நாம் கற்பிக்க முடியும்?

அப்போஸ்தலர் 2:37-47:

இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச்

சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று,

> ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.

இந்த வசனங்களிலிருந்து, இயேசுவின் முதல் சீஷர்கள் என்ன செய்தார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இதே நடைமுறைகளை பின்பற்ற மற்றவர்களுக்கு நாம் கற்பிக்க முடியும். வேதாகமத்தின் மற்ற இடங்களிலிருந்து, இந்த

நடைமுறைகள் இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்காக கட்டளையிடப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். இயேசுவின் இந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு நாம் கற்பிக்க முடியும். நாம் கற்பிக்கக்கூடிய ஏழு கட்டளைகள்:





**மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம்**




**ஞானஸ்நானம் பெற்றிருத்தல்**




**ஜெபித்தல்**





சீஷர்களை
உருவாக்குதல்




அன்பு
செலுத்துதல்




கர்த்தருடைய
பந்தியிலே
பங்கு பெருதல்




கொடுத்தல்

## இயேசுவின் இந்த கட்டளைகளை நாம் எவ்வாறு கற்பிக்க முடியும்?

மற்றவர்களுக்கு இந்த கட்டளைகளை கற்பிக்க உதவும் திட்டங்கள். முதலில், சீஷர்களை உருவாக்கும்பொழுது பொதுவான திட்டத்தையும் வேதாகமத்தை புரிந்துகொள்வதற்கான எளிய முறையையும் அறிமுகப்படுத்துவது பயனுள்ளது.

சீஷர்களை உருவாக்கும் ஒவ்வொரு காலத்திலும், மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு பொதுவான வழிகாட்டுதலைப் பின்பற்றுவது உதவியாக இருக்கும். இந்த மூன்று பாகங்கள்:

## 1 திரும்பிப் பார்ப்பது

இந்த நேரத்தில்,
நீங்கள் ஒருவரையொருவர்
கவனித்துக்கொள்கிறீர்கள், ஒன்றாக
ஆராதிக்கிறீர்கள், எந்தவொரு
கடமைகளுக்கும் ஒருவருக்கொருவர்
பொறுப்பாகவும் இருக்கிறீர்கள்.

## 2 மேலே பார்ப்பது

இந்த நேரத்தில், நீங்கள்
இயேசுவிடமிருந்து ஒரு
புதிய கட்டளையை
அறிமுகப்படுத்துகிறீர்கள் அல்லது
வேதாகமத்தை படிக்கிறீர்கள்.
ஒவ்வொரு நபருக்கும் கீழ்ப்படிந்து
செல்ல போதுமான வேதாகம

உள்ளடக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

## 3 முன்னோக்கிப் பார்ப்பது

இந்த நேரத்தில், நீங்கள் ஒவ்வொரு நபரையும் அவர்கள் அனுபவித்ததைக் கடந்து செல்லத் தயார்படுத்துகிறீர்கள், மேலும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய அவர்களை நியமிக்கிறீர்கள்.

வேதத்தின் வசனங்களைப் புரிந்துகொள்வதற்கும் விவாதிப்பதற்கும் ஒரு எளிய முறையைக் கொண்டிருப்பது ஒவ்வொரு சீஷத்துவத்திற்கும் உதவியாக இருக்கும். பின்வரும் நான்கு கேள்விகளைப் பற்றி விவாதிப்பதன்

மூலம் ஒரு நல்ல முறை தொடங்குகிறது:

1. **தேவனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?**
2. **மனிதனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?**
3. **நாம் என்ன செய்யக்கூடாது?**
4. **நாம் என்ன செய்ய வேண்டும்?**

இந்த கேள்விகள் வேதாகமத்தின் வசனங்களை மற்றவர்களுடன் புரிந்துகொள்ளவும் விவாதிக்கவும் நமக்கு உதவுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு நாம் பதிலளிக்கும்போது, நமது குறிப்பை காட்டும் உரையின் குறிப்பிட்ட பகுதிகளை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். எல்லா கேள்வியும்

எப்போதும் பொருந்தாது. இந்த கேள்விகளுக்கு பதிலளித்த பிறகு, வசனங்களின் முக்கிய விடயத்தையும் எழும் எந்த கேள்விகயையும் விவாதிக்கலாம்.

**ராஜ்ய வளர்ச்சிக்கு**

© 2023 ராஜ்ய வளர்ச்சிக்கு

ராஜ்ய வளர்ச்சிக்கான கூடுதல் தகவலுக்கு, கொடுக்கப்பட்டுள்ள லின்க்கை கிளிக் செய்யவும்:
**www.forkingdomgrowth.com**

Scripture quotations are from The Holy Bible, BSI - Tamil - O.V. (New Ortho) published by The Bible Society of India. Used by permission. All rights reserved.

ராஜ்ய வளர்ச்சிக்கு இந்த பொருளுக்கு பங்களித்த அனைவருக்கும் மிக்க நன்றி. கர்த்தரில் நீங்கள் செய்த சேவை ஒருபோதும் வீணாகாது.